## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 107/2017 | Date : 26.07.2023 | RW2 |
|---|---|---|
| Name: கிருஷ்ணமூர்த்தி | S/o. ஆண்டி | |
| Evidence Recorded Time: 12.21 P.M. to 12.30 P.M. | | |

**மனுதாரர் தர்ப்பில் குறுக்கு விசாரணை :-**

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், ஆவணங்கள் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரிதான். நான் மேட்டூர் கிளை அலுவலகத்தில் முதுநிலை கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். விபத்தில் சம்மந்தப்பட்ட லாரி எங்கள் நிறுவனத்தில் முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தன்று லாரி மேட்டுரில் இருந்து பவானி செல்லும் சாலையில் சென்று கொண்டிருந்தது என்றால் சரிதான். எதிர் திசையில் பவானியில் இருந்து மேட்டுர் நோக்கி கார் வந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். கார் லாரியின் டயரில் மோதி தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. லாரி வாகனம் முறையாக எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதால் நாங்கள் தான் நஷ்டஈடு தரக்கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. விபத்து நடந்த உடன் மனுதாரர் மயக்கம் அடைந்ததால் அவரை மருத்துவமனையில் அனுமதித்த நேரத்தை பயன்படுத்தி நாங்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. காரின் ஓட்டுநர் ஜெயக்குமார் பவானி நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தியுள்ளதால் எங்கள் நிறுவனம் தான் நஷ்டஈடு தரக்கடமைப்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தை பொறுத்து மனுதாரர் மூன்றாம் நபர் என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனம் நஷ்டஈடு தருவதில் இருந்து தப்பித்து கொள்வதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**5-ம் எதிர்மனுதாரர் தர்ப்பில் குறுக்கு விசாரணை :-**

விபத்து எவ்வாறு நடைபெற்றது, யாருடைய கவனக்குறைவில் ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது, ஆவணங்களின் அடிப்படையில்தான் தெரியும். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எங்கள்

நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ள லாரியை பொறுத்தும், எங்கள் நிறுவனத்தை பொறுத்தும் காரில் பயணம் செய்த நபர்கள் மூன்றாம் நபர்கள் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ள லாரிக்கு மூன்றாம் நபர் காப்பீடு உள்ளது என்றால் சரிதான். விபத்தினால் காரில் பயணம் செய்த நான்கு நபர்களுக்கும் காயம் ஏற்பட்டது பற்றி முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். விபத்து நடந்த இடம் மேட்டூர் – பவானி சாலையின் இடது புறமாக நடைபெற்றது என்றால் சரிதான். விபத்தின் போது காரில் பயணம் செய்த நான்கு பேரும் காயம்பட்டு சிகிச்சைக்காக கோவை கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். 23.03.2014–ம் தேதி அதிகாலை 3.30 மணிக்கு விபத்து நடந்து என்றும், ஆனால் அன்றைய தினம் மதியம் 3.30 மணிக்கு விபத்து நடந்ததாக புகார் கொடுக்கப்பட்டது என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி புகாரை கார் ஓட்டுநர் மீது தான் தவறு என்று புகார் கொடுத்தவர் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்த லாரியின் ஓட்டுநர் கோவிந்தராஜ் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். காரில் பயணம் செய்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததை பயன்படுத்தி லாரியின் ஓட்டுநர் புகார் கொடுத்தார் என்பதை மறுக்கமுடியாது என்றால் அது தவறாகும். விபத்து நடைபெற்று மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கும் போது விபத்து எவ்வாறு நடைபெற்றது என்று விவரம் கேட்டு அதை மருத்துவமனையில் பதிவு செய்வார்கள் என்றால் சரிதான். விபத்தில் காயம் அடைந்தவர்களுக்கு விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்றிதழ் ஆகிய ஆவணங்களை பராமரித்து காயம் அடைந்த நபர்கள் மற்றும் காவல் துறைக்கு வழங்குவார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். விபத்து பற்றி தனியாக புலனாய்வு செய்து ஆவணங்களை சேகரித்துள்ளோமா என்றால் சேகரித்துள்ளோம். காயம்பட்ட நபரின் காயச் சான்றிதழ் புலனாய்வு கோப்பில் உள்ளதா என்றால் உள்ளது. காயம் பட்ட ரேவதி, மாதேசன் ஆகியோரின் காயச் சான்றிதழில் was travelling by car which was hit by Lorry என்று குறிப்பிடப்பட்டுள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரர் விபத்தானது லாரியின் ஓட்டுனரால் விபத்து ஏற்பட்டது என்று மனு தாக்கல் செய்து பின்பு எங்கள் நிறுவனத்தின் தலையீடு மூலம் 4, 5 எதிர்மனுதாரர்கள் ஒரு தரப்பினராக சேர்க்கப்பட்ட

விவரம் தெரியுமா என்றால் தெரியாது. லாரி ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்தால் 5ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல, லாரி ஓட்டுநர் மீது எந்த தவறும் இல்லை என்று பவானி காவல் துறையால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் எங்கள் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது அல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ஒம்/–RW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.